# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1650/31 - 2010 අප්‍රේල් 23 වැනි සිකුරාදා - 2010.04.23

*1650/31 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**மேல் மாகாண மாகாண சபை**

மேல் மாகாணத்தின் 2010 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நிதி (திருத்தம்) நியதிச்சட்டம்

மேல் மாகாண மாகாண சபையில் முதல் அமைச்சரும், நிதி திட்டமிடல், சட்டம் ஒழுங்கு, காணி, கல்வி, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், மனிதவலு, மின்சக்தி மற்றும் வலு மற்றும் தொழில்வாய்ப்பு மற்றும் பொருளாதார ஊக்குவிப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், 2010 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்கத்தைக் கொண்ட நிதி (திருத்தம்) நியதிச் சட்டம் தொடர்பில் மேல் மாகாண சபையின் கௌரவ ஆளுநர் அவர்களின் சம்மதத்தின் பேரில் 2010, மாச்சு 8 ஆந் திகதி தொடக்கம் அந்நிதி (திருத்தப்பட்டவாறான) நியதிச் சட்டத்தை நடைமுறைக்கு கொண்டுவரும்படி இங்கு பிரகடனப்படுத்துகின்றேன்.

பிரசன்ன ரணதுங்க,<br>
முதலமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல், சட்டமும், ஒழுங்கும், காணி, கல்வி,<br>
உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், மின்சக்தி மற்றும்<br>
வலு, மனிதவலு மற்றும் தொழில்வாய்ப்பு மற்றும் பொருளாதார<br>
மேம்பாட்டு அமைச்சர்<br>
(மேல் மாகாண மாகாண சபை).

மேல் மாகாண முதல் அமைச்சர் அலுவலகம்,<br>
"சிராவஸ்தி மந்திரய",<br>
கொழும்பு 07,<br>
2010, ஏப்பிறல் 16.

**மேல் மாகாணத்தின் 2010 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நிதி (திருத்தம்) நியதிச் சட்டம்**

***2009 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நியதிச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க மேல் மாகாண நியதிச் சட்டத்தை திருத்துவதற்கான நியதிச்சட்டம்***

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மேல் மாகாணத்தின் மாகாண சபையினால் பின்வருமாறு நிறைவேற்றப்படுவதாகுக :-

*சுருக்கப்பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.*

1. இந்த நியதிச்சட்டம் மேல் மாகாணத்தின் 2010 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நிதி (திருத்தம்) நியதிச்சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் ஆளுநரின் அங்கீகாரத்தைப் பெற்ற பின்னர் வர்த்தமானப்பத்திரிகையில் வெளியிடும் கட்டளையின் மூலம் அமைச்சரினால் கட்டளையிடப்படும் திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

*பிரதான நியதிச் சட்டத்தின் 3 (2) ஆம் உட் பிரிவை திருத்தம் செய்தல்.*

2. பிரதான நியதிச் சட்டத்தின் 3 (2) உட்பிரிவை நீக்கி அதற்குப்பதிலாக கீழ்காட்டப்பட்ட உட்பிரிவை பிரதியீடு செய்து அப்பிரிவு இவ்வாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளது:-

(2) இவ் அத்தியாயத்தின் நோக்கத்திற்காக "தொழில்" என்பது, ஏதேனும் பொருளை மொத்த விற்பனை மூலம் அல்லது சில்லறை விற்பனை மூலம் விற்றல் என்று பொருளாகும். ஆனால் உற்பத்தியாளர் ஒருவரினால் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் எவையும் அதற்குரியதன்று

*பிரதான நியதிச் சட்டத்தின் 11ஆவது பிரிவை திருத்தம் செய்தல்.*

3. 2009 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நியதிச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க மேல் மாகாண நியதிச் சட்டத்தின் 11ஆவது பிரிவை நீக்கி அதற்குப்பதிலாக கீழ்காட்டப்பட்ட பிரிவை பிரதியீடு செய்து அப்பிரிவு இவ்வாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளது :-

*விற்பனை வரவு வரி கொடுப் பனவு.*

11. (1) ஏதேனும் காலாண்டு தொடர்பில் மொத்த விற்பனை வரவுவரி அக்காலாண்டு முடிவுதனை அடுத்து வரும் மாதத்தின் பதினைந்தாம் திகதிக்குப்பிந்தாமல் செலுத்தப்படல் வேண்டும். மொத்த விற்பனை வரவு ரூபா பத்து மில்லியனை விஞ்சும் சந்தர்ப்பத்தில் பின்தொடரும் காலாண்டுக்காக செலுத்தப்பட வேண்டிய மொத்த விற்பனை வரவு வரி கீழ்க்காட்டப்பட்டுள்ள முறையில் செலுத்தப்படுதல் வேண்டும் :-

(அ) முன்னைய காலாண்டுக்காக செலுத்தப்படவேண்டிய மொத்த விற்பனை வரியில் மூன்றில் ஒன்றுக்குச் சமமான நிதியை பின்தொடரும் காலாண்டின் இரண்டாவது மாதத்தின் பதினைந்தாம் திகதி அல்லது அதற்கு முன்னர் ;

(ஆ) முன்னைய காலாண்டொன்றுக்காக செலுத்தப்பட வேண்டிய மொத்த விற்பனை வரியில் மேலும் மூன்றில் ஒன்றிற்குச் சமமான நிதியை பின்தொடரும் காலாண்டின் மூன்றாவது மாதத்தின் பதினைந்தாம் திகதி அல்லது அதற்கு முன்னர் ;

(இ) குறித்த காலாண்டு ஒன்றிற்காக செலுத்தப்படவேண்டிய மொத்த விற்பனை வரியில் மிகுதி பகுதி அக்காலாண்டு முடிவுதலை அடுத்து வரும் முதலாவது மாதத்தின் பதினைந்தாம் திகதி அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்படல் வேண்டும் ;

அவ்வாறு செலுத்தப்படாத ஏதேனும் வரி தவணை தவறியதாகக் கருதப்படல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வரியானது எந்த ஆளால் செலுத்தப்படற்பாலதோ அல்லது எந்த நிறுவனத்தினது அந்த ஆளால் அல்லது பங்குடமை ஒன்றினால் அல்லது செலுத்தப் படற்பாலதாயுள்ள சந்தர்ப்பத்தில் அப்போது அத்தகைய ஆட்களுள் ஒவ்வொருவரும் மற்றும் பங்குடைமையிலுள்ள ஒவ்வொரு பங்காளியும் இந்நியதிச் சட்டத்தின் நோக்கங்களுக்காக தவணை தவறியவராகக் கருதப்படல் வேண்டும்.

*விற்பனைக்காக எவராவது ஒரு வருக்கு அல்லது நிறுவனத்திற்கு குறித்தொதுக்கப் பட்ட பொருட்களுக் காக தடுத்து வைக் கும் மொத்த விற் பனை வரி ஒன்று அறவிடுதல்.*

(2) இந்நியதிச் சட்டத்தில் எவற்றைப்பற்றி குறிப்பிடப்பட்டிருந்தாலும் எவராவது இறக்குமதியாளருக்கு, உற்பத்தியாளருக்கு அல்லது விற்பனையாளரினால் ஏதாவது பொருளொன்று விற்பனை செய்வதற்காக எவராவது ஒருவருக்கு அல்லது நிறுவனத்திற்கு குறித்தொதுக்கப்படும் சந்தர்ப்பத்தில் அவ்வாறு குறித்தொதுக்கப்பட்ட அடிப்படையில் ஏற்படும் கொடுக்கல் வாங்கல்களுக்காக கிடைக்கப்பெறும் அல்லது கிடைக்கப்பெறுவதற்கு குறித்த நிதித்தொகை அளவில் அப்பொருளுக்காக 7 (1) உட்பிரிவின் கீழ் அமைச்சரினால் காலத்திற்கு காலம் வர்த்தமானப்பத்திரிகை அறிவித்தல் மூலம் கட்டளையிடப்படும் மொத்த விற்பனை வரி வீதத்தின் அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டு விற்பனை வரவு வரிக்குச் சமமான தொகையை தடுத்து வைக்கும் மொத்த விற்பனை வரியாக அறவிடப்படல் வேண்டும்.

*பதிவு செய்தல்.*

(3) (அ) இந்நியதிச் சட்டம் நடைமுறைக்கு வரும் திகதியும் அல்லது அதற்குப் பின்னர் அல்லது தடுத்து வைக்கப்பட்ட மொத்த விற்பனை வரவு வரி ஒன்றை அறவிடப்பட முடியுமான கொடுக்கல்வாங்கல் மேற்கொள்ளப்படும் அனைவரும் அல்லது நிறுவனங்களும் இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இந்நியதிச் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட முறைகளுக்கு அமைய பதிவு செய்தல் வேண்டும்;

(ஆ) (அ) வாசகத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள அனைவரும் அல்லது நிறுவனங்களும் பதிவு செய்யப்படுவதின் கீழ் உள்ள திகதியிலிருந்து 30 தினங்களுக்குள் பதிவு செய்து கொள்வதற்காகவுள்ள விண்ணப்பத்தை ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் ;

(இ) (அ) வாசகத்தின் கீழ் பதிவு செய்து கொள்ளும் பணிகளுக்காக வரி அறவிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களுக்கு உரிய தகவல்களை ஆணையாளரினால் எப்போதாவது அல்லது எச்சந்தர்ப்பத்திலும் கோர முடியும் ;

(ஈ) (அ) வாசகத்தின் கீழ் பதிவு செய்யப்படவேண்டிய அனைத்து ஆட்களும் அல்லது நிறுவனங்களும் (ஆ) வாசகத்தின் கீழ் ஆணையாளரிடம் பதிவு செய்து கொள்வதற்காக விண்ணப்பமொன்று சமர்ப்பிக்கும் பட்டசத்தில் அல்லது அந்த ஆள் அல்லது நிறுவனம் (அ) வாசகத்தின் கீழ் பதிவு செய்யப்படல் வேண்டும் என்பதுடன் ஆணையாளர் தீர்மானம் ஒன்று எடுப்பாராயின் அல்லது அந்த ஆள் அல்லது நிறுவனம் ஆணையாளரினால் பதிவு செய்யப்படல் வேண்டும். ஆணையாளரினால் எவராவது ஒருவர் அல்லது நிறுவனமொன்று பதிவு செய்யப்பட்டதன் பின்பு;

(i) பதிவு செய்யப்பட்ட இலக்கம் மற்றும் ;

(ii) பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் ஒன்று ;

அந்த ஒருவர் அல்லது நிறுவனத்திற்கு வழங்கப்படல் வேண்டும்.

(உ) சகல பதிவு செய்யப்பட்டவர்களும் அல்லது நிறுவனத்தினால் -

(i) அந்த ஒருவர் அல்லது நிறுவனத்தினால் செய்யப்பட்டுவரும் தொழில்பெயரில் தொழில் அமைக்கப்பட்டுள்ள இடத்தின் அல்லது முகவரியில் அல்லது ;

(ii) அந்த ஒருவர் அல்லது நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள அல்லது செய்யப்பட்டு வரும் வரி அறவிடப்படக்கூடிய கொடுக்கல்வாங்கல்களின் தன்மை, உரித்து அல்லது உரிமை அல்லது ஏதாவது மாற்றங்கள் ஏற்படும்போது அம்மாற்றங்கள் ஏற்பட்ட 14 தினங்களுக்குள் ஆணையாளரிடம் எழுத்துமூலமான அறிவித்தல் கொடுக்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

(4) (அ) (2) உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மொத்த விற்பனை வரவு வரி அறவிடப்படும் சகல ஏற்றுமதியாளர் உற்பத்தியாளர் அல்லது விற்பனையாளரினால் ஏதாவது பொருள் ஒன்றை விற்பனை செய்வதற்காக குறித்தொதுக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அந்த கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக- தடுத்து வைக்கப் பட்டிருக்கும் மொத்த விற்பனவு வரவு வரி அறவிடப் படும் போது உறு திச் சீட்டு பத்திரம் ஒன்று வழங்கல்.

(i) கொடுக்கல் வாங்கல்கள் செய்துகொள்ளப்பட்ட திகதி இடம், அத்துடன் பொருட்களின் வகை ;

(ii) செய்துகொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கலின் பெறுமதி ;

(iii) அந்த ஒருவரது அல்லது நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி ;

(iv) அத்துடன் அந்த கொடுக்கல் வாங்கல்களுக்கு சுமத்துவதற்கு முடியுமான தடுத்து வைக்கும் மொத்த விற்பனைவரவு வரியை

காட்டுவதுடன் ஆணையாளருக்கும் பிரதி ஒன்றுடன் பொருளை குறித்தொதுக்கிய ஆள்ளொருவருக்கு அல்லது நிறுவனத்துக்கு உறுதிச்சீட்டு ஒன்று வழங்கப்படல் வேண்டும்.

(ஆ) (2) உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய எவராவது இறக்குமதியாளர் ஒருவர், உற்பத்தியாளர் ஒருவர் அல்லது விற்பனையாளரினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள மொத்த விற்பனை வரவு வரியை அறவிடப்படும் போது அம் மொத்த விற்பனை வரவு வரி அறவிடப்படுவதற்கு இயன்றமை எத்தகைய கொடுக்கல் வாங்கல்களுக்கானது, அந்த கொடுக்கல் வாங்கல் நடைபெற்ற காலாண்டொன்றுக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ள மொத்த விற்பனவு வரவு வரித்தொகை அவ்வாறு தடுத்து வைக்கப்பட்ட தினத்திலிருந்து 14 நாட்களுக்குள் ஆணையாளர் கட்டளையிடப்பட்ட படிவத்திற்கு அமைய (அ) வாசகத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள உறுதிச்சீட்டின் பிரதியுடன் ஆணையாளருக்கு அனுப்புதல் வேண்டும் ; ஆணையாளரிடம் அனுப்புதல்.

(இ) மொத்த விற்பனை வரவு வரிக்கு கீழ் எவராவது ஒருவரது அல்லது நிறுவனத்தின் ஏதாவது காலாண்டின் மொத்த விற்பனை வரவில் இதற்கு முன்னரான ஏற்பாடுகளில் செய்யப்பட்டுள்ளபடி தடுத்து வைக்கப்பட்டுள்ள மொத்த விற்பனை வரவு வரியை அறவிடப்பட்டுள்ள ஏதாவது பொருள் மொத்த விற்பனை வரவு வரிக்கு ஈடு செய்தல் அல்லது குறைக்கப்படுதல்.

ஒன்றை விற்பனையின் மூலம் பெறப்பட்ட, அல்லது கிடைக்கப்படவேண்டிய நிதி அளவு உட்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் (2) ஆவது உட்பிரிவின் கீழ் தடுத்து வைக்கப்படும் மொத்த விற்பனை வரவு வரியை செலுத்தப்பட்டுள்ளது என (அ) வாசகத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள உறுதிச்சீட்டை ஆணையாளரிடம் சமர்ப்பிப்பதன் அடிப்படையில் அதன் காலாண்டுக்காக செலுத்தப்படவேண்டிய மொத்த விற்பனை வரவு வரியின் அந்த உறுதிச்சீட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மொத்த விற்பனை வரவு வரி என காட்டப்பட்டுள்ள நிதித்தொகையை குறித்துக்கொள்வதற்கு அல்லது செலுத்தப்படவேண்டிய நிலுவை மொத்த விற்பனை வரவு வரிக்காக ஈடுசெய்வதற்கு அந்த ஒருவருக்கு அல்லது நிறுவனத்துக்கு உரிமையுண்டு.

*ஒப்பந்தம் செய்யப்பட்ட கொடுப்பனவுகளில் மொத்த விற்பனை வரவு வரி குறைக்கப்படுதல்.*

(5) மேல் மாகாணத்தினுள் நடைபெற்ற ஏதாவது கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக ஒப்பந்தம் ஒன்று செய்துகொள்ளப்பட்ட இந்நியதிச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முந்தியதாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் எவராவது ஆள் ஒருவர் அல்லது நிறுவனத்தினால் தன்னை சார்ந்திருப்பவராகவுள்ள ஒப்பந்தத்தின் பிரகாரம் அல்லது ஒப்பந்தத்திற்கு சார்ந்தவராகவுள்ள வேறு எவராவது ஒருவர் அல்லது நிறுவனத்திற்காக அந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் ஏதாவது கொடுப்பனவு செய்யப்படும் சந்தர்ப்பத்தில் 7 (1) ஆம் உட்பிரிவின் கீழ் அமைச்சர் ஒருவரினால் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையின் மூலம் காலத்திற்கு காலம் கட்டளையிடப்படும் வரி வீதத்தின் அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டு மொத்த விற்பனை வரவு வரிக்குச் சமமான நிதித்தொகையை தடுத்து வைக்கப்படும் மொத்த விற்பனை வரவு வரியாக அதனை கொடுப்பனவு செய்யும் அனைத்து ஆட்களும் அல்லது நிறுவனங்களினாலும் அந்த தொகையை கொடுப்பனவு செய்யும் போது குறைக்கப்படுதல் வேண்டும். அவ்வாறு இருந்தாலும் அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றப்படும்போது கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய மொத்த பெறுமதி ரூபாய் ஐம்பது ஆயிரத்தை தாண்டாவிட்டால் அத்தகைய குறைக்கப்படுதல் செய்யப்படலாகாது.

*குறைக்கப்பட்ட மொத்த விற்பனை வரவு வரி தொடர்பாக சான்றிதழ் ஒன்றை ஆணையாளருக்கு அனுப்புதல் வேண்டும் என்பதாக.*

(6) (அ) (5) உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய தடுத்து வைக்கப்பட்டுள்ள மொத்த விற்பனை வரவு வரியை குறைக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அந்த நிதித்தொகை தொடர்பாக -

(i) கொடுப்பனவு செய்யப்பட்ட எவராவது ஒருவருக்கு அல்லது நிறுவனத்திற்கு அந்த ஒருவரினது அல்லது நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி ;

(ii) அவ்வாறு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள நிதி அளவு;

(iii) குறைக்கப்பட்டுள்ள வரி சதவீதம் அத்துடன் வரி நிதித்தொகை அளவு ;

(iv) சரியான முறையில் கொடுப்பனவு செய்யப்பட்ட தேறிய தொகை ;

காட்டப்படுவதுடன் அந்த மொத்த விற்பனை வரவு வரி குறைக்கப்பட்டவாரான எவராவது ஆள் ஒருவர் அல்லது நிறுவனத்தினால் அந்த குறைக்கப்பட்ட விடயம் செய்யப்பட்டமை எவராவது ஒருவருக்கு அல்லது நிறுவனம் ஒன்றிற்காக செய்யப்பட்ட கொடுப்பனவின் மூலமாகவா? அந்த ஆள் ஒருவருக்கும் அல்லது நிறுவனத்திற்கும் ஆணையாளருக்கும் பிரதிநிதிகளுடன் சான்றிதழ் ஒன்று வழங்கப்படல் வேண்டும்.

*ஒப்பந்தமிடப்பட்ட கொடுப்பனவுகளில் மொத்த விற்பனை வரவு வரியை ஆணையாளரிடம் அனுப்பி வைத்தல்.*

(ஆ) (5) உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மொத்த விற்பனை வரவு வரி குறைக்கப்பட்டிருக்கும் எவராவது ஒருவர் அல்லது நிறுவனத்தினால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மொத்த விற்பனை வரவு வரியை குறைப்பதற்கு ஏற்பட்டமை எந்த கொடுக்கல் வாங்கல்களுக்காகவும் என்றும் அந்த கொடுக்கல் வாங்கல்களுக்காக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மொத்த விற்பனை வரித்தொகை அவ்வாறு தடுத்து வைக்கப்பட்ட திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் ஆணையாளரினால் கட்டளையிடப்பட்ட படிவத்திற்கு அமைய (அ) வாசகத்தின் கீழ் வழங்கப்படவேண்டியுள்ள சான்றிதழ் பிரதியுடன் ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும் ;

(இ) மொத்த விற்பனை வரவு வரியின் கீழ் எவராவது ஒருவருடைய அல்லது நிறுவனத்தின் ஏதாவது காலாண்டொன்றுக்கான மொத்த விற்பனை வரியின் அடிப்படையில் அறவிடப்படக்கூடிய வரியின் இதற்கு முன்னர் ஏற்பாடுகள் செய்யப்பட்டபடி ஒப்பந்தமிடப்பட்ட கொடுப்பனவுகளிலிருந்து தடுத்து வைக்கப்பட்ட மொத்த விற்பனை வரவு வரி குறைக்கப்பட்டிருந்த தொகை அளவு உட்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் (5) உட்பிரிவின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மொத்த விற்பனை வரவுவரி குறைக்கப்பட்டுள்ளது என்பதுடன் (அ) வாசகத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள சான்றிதழை ஆணையாளரிடம் சமர்ப்பிப்பதன் அடிப்படையில் அந்த காலாண்டொன்றுக்கான கொடுப்பனவு செய்யப்படவேண்டியுள்ள மொத்த விற்பனை வரவு வரியென எடுத்துக்காட்டப்பட்டுள்ள தொகையில் குறைத்துக்கொள்வதற்கு அல்லது கொடுப்பனவு செய்யப்படவேண்டியுள்ள நிலுவை மொத்த விற்பனை வரவு வரிக்காக ஈடுசெய்வதற்கு அந்த ஒருவருக்கு அல்லது நிறுவனத்திற்கு உரிமை உண்டென கொள்ளப்படும்.

*ஒப்பந்தமிடப்பட்ட கொடுப்பனவுகளில மொத்த விற்பனை வரவு வரியை ஈடு செய்தல் அல்லது குறைக்கப்படுதல்.*

(7) ஒவ்வொரு காலாண்டொன்றின் போது மொத்த விற்பனை வரவை எடுத்துக்காட்டும் அறிக்கையை விநியோகிப்பதற்கு, வரி கொடுப்பனவு செய்வதற்கு, மொத்த விற்பனை வரவு வரியை அறவிடுவதற்கு, கொடுப்பனவுகளை செய்வதற்கு தவறும் பட்சத்தில் சட்டரீதியான நடவடிக்கைகள் எடுப்பதற்கும், தண்டங்களை விதிப்பதற்கும், அத்துடன் மொத்த விற்பனை வரவு வரியை மீளச் செலுத்துவதற்குரிய இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளில் தேவையான மாற்றங்கள் செய்வதுடன் இப்பிரிவின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள மொத்த விற்பனை வரவு வரிகளுக்குரிய அல்லது அது தொடர்பான அறிக்கையை விநியோகிப்பதற்கும், வரி செலுத்துவதற்கும், வரிவிதிப்பதற்கும், கொடுப்பனவுகளை செலுத்தாது தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்கும், தண்டங்களை விதிப்பதற்கும் அத்துடன் மொத்த விற்பனை வரவு வரியை மீளச் செலுத்துவதற்கும், அந்த முறையிலேயே ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

*பிரதான நியதிச் சட்டத்தில் சில ஏற் பாடுகளை உரிய தாக்கிக்கொள்ள முடியும் என்பதாக.*

(8) (அ) (5) உட்பிரிவின் நோக்கத்திற்காக ''ஒப்பந்தம்'' என்பது -

(i) ஏதாவது அல்லது இயல்பான தன்மையுடைய பொருட்களை விநியோகம் செய்வது தொடர்பாகவுள்ள ஒப்பந்தம் ஒன்று :

*11ஆவது பிரிவுக் கான பொருள் கோடல்.*

(ii) (i) உப சரத்தில் குறிப்பிடப்பட்ட ஏதாவது ஒப்பந்தம் தொடர்பாகவுள்ள உப ஒப்பந்தமொன்று எனக் கருதப்படும் ;

அவ்வாறாயின் சேவையை வழங்கும் ஒருவரினால் தமது சேவை விநியோகத்திற்காக செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் ஒன்று இப்பிரிவின் நோக்கத்திற்காக ஒப்பந்தம் ஒன்றாக பொருள்கோடல் படமாட்டாது ;

(ஆ) இப்பிரிவின் நோக்கத்திற்காக ''இறக்குமதியாளர்'' என்பது ஏதாவது பொருட்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து விற்பனைக்காக எவராவது ஒருவருக்கு அல்லது நிறுவனத்திற்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள ஒருவருக்கு அல்லது நிறுவனத்திற்கு எனக் கருதப்படும்.

(இ) இப்பிரிவின் நோக்கத்திற்காக ''உற்பத்தியாளர்'' என்பது அவரினால் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் அனைத்தையும் விற்பனைக்காக எவராவது அல்லது நிறுவனத்திற்கு குறித்தொதுக்கப்படும் ஒருவருக்கு அல்லது நிறுவனத்திற்கு என கருதப்படும் ;

(ஈ) இப்பிரிவீன் நோக்கத்திற்காக ''விற்பனையாளர்'' என்பது விற்பனைக்காக பொருட்களை குறித்தொதுக்கப்படும் ஒருவருக்கு அல்லது நிறுவனத்திற்கு என கருதப்படும் ;

(உ) இப்பிரிவின் நோக்கத்திற்காக ''குறித்தொதுக்குதல்'' என்பது எவராவது இறக்குமதியாளர் ஒருவர் உற்பத்தி செய்பவர் அல்லாத ஒருவருக்கு அல்லது நிறுவனத்திற்கு பொருட்கள் பெற்றுக்கொடுப்பது அல்லது எவராவது உற்பத்தியாளர் ஒருவர் விற்பனைக்காக எவராவது ஒருவருக்கு அல்லது நிறுவனத்திற்கு பொருட்களை வழங்குவது அல்லது விற்பனையாளர் ஒருவர் விற்பனைக்காக எவராவது ஒருவருக்கு அல்லது நிறுவனத்திற்கு பொருட்களை வழங்குவது என கருதப்படும்.

பிரதான நியதிச் சட்டத்தின் 16 ஆவது பிரிவை திருத்தம் செய்தல்.

4. பிரதான நியதிச் சட்டத்தின் 16 ஆவது பிரிவை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாக கீழ்க்காட்டப்பட்டுள்ள பிரிவை பிரதியீடு செய்வதன் மூலம் அப்பிரிவு இவ்வாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளது:-

அறிக்கை ஏற்றுக் கொள்ளப்படவில்லை ஏற்றுக்கொள்ளப் பட்டது போன்ற விவரத்தை மதிப் பீட்டாளரினால் அறிவிக்கப்படல் வேண்டும் என்ப தாகும்.

16. எவராவது ஒரு ஆள் அல்லது நிறுவனத்தினால் 10 ஆவது பிரிவின் கீழ் ஏதாவது காலாண்டொன்றுக்காக வழங்கப்பட்டுள்ள அறிக்கையொன்று வரிமதிப்பீட்டாளரினால் ஏற்றுக்கொள்ளப்படாத பட்சத்தில் அந்த ஒரு ஆள் அல்லது நிறுவனம் தொடர்பாக அக்காலாண்டு தொடர்பில் 13 ஆவது பிரிவு அல்லது 14 ஆவது பிரிவின் கீழ் வரி மதிப்பீடுகள் அல்லது மேலதிக வரி மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் வரி மதிப்பீட்டாளரினால் அந்த மதிப்பீட்டு அறிக்கை ஏற்றுக்கொள்ளப்படவில்லையா அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்டதா என்பதை அந்த ஒரு ஆளுக்கு அல்லது நிறுவனத்திற்கு பதிவு செய்யப்பட்ட கடிதத்தின் மூலம் அறிவித்தல் கொடுக்கப்படல் வேண்டும்.

பிரதான நியதிச் சட்டத்தின் 34 (அ) உட்பிரிவை திருத்தம் செய்தல்.

5. பிரதான நியதிச்சட்டத்தின் 34 (அ) உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாக கீழ் காட்டப்பட்டுள்ள பிரிவை பிரதியீடு செய்வதன் மூலம் அவ் உட்பிரிவு இவ்வாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளது :-

(அ) 10 ஆவது பிரிவிலும், 11 ஆவது பிரிவிலும், 30 ஆவது பிரிவிலும் அல்லது 31 ஆவது பிரிவிலும் உள்ள ஏற்பாடுகளுக்கு அமைய செயற்படுவது தவறும் பட்சத்தில் ; அல்லது

பிரதான நியதிச் சட்டத்தின் 85 (2) உட்பிரிவை திருத்தம் செய்தல்.

6. 2009 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நியதிச் சட்டத்தின் திருத்தப்பட்டவாறான பிரதான நியதிச் சட்டத்தின் 85 (2) உட்பிரிவு நீக்கப்பட்டு அதற்குப்பதிலாக கீழ்காட்டப்பட்டுள்ள உட்பிரிவு பிரதியீடு செய்வதன் மூலம் அவ் உட்பிரிவு இவ்வாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளது :-

(2) 4 ஆவது பிரிவின் கீழான அல்லது 11 (1) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ), (இ) வாசகத்தின் கீழ் உள்ள அல்லது 13 ஆவது பிரிவின் கீழுள்ள அல்லது 14 ஆவது பிரிவின் கீழுள்ள அல்லது 57 (1) ஆம் உட்பிரிவின் (ஆ) வாசகத்தின் கீழுள்ள அல்லது 98 (5) உட்பிரிவின் (அ) வாசகத்தின் கீழுள்ள அல்லது ஏதாவது அறிவித்தல் ஒன்றின் மூலம் செலுத்துவதற்கு குறிக்கப்பட்ட வரித்தொகையை அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட திகதிக்கு முன்பு கொடுப்பனவு செய்யப்படுவதுடன் அவ்வாறு செலுத்தப்படாத வரி செலுத்துவதற்கு தவறிய வரியாக கவனத்தில் கொள்ளப்படும் ;

பிரதான நியதிச் சட்டத்தின் 87 (2) உட்பிரிவை திருத்தம் செய்தல்.

7. 2009 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நியதிச் சட்டத்தின் திருத்தப்பட்டவாறான பிரதான நியதிச் சட்டத்தின் 87 (2) ஆம் உட்பிரிவு நீக்கப்பட்டு அதற்குப்பதிலாக கீழ்காட்டப்பட்டுள்ள உட்பிரிவை பிரதியீடு செய்வதன் மூலம் அந்த உட்பிரிவு இவ்வாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளது :-

(2) வரியைச் செலுத்த தவறுகின்ற ஆள் ஒருவரினால் 11 (1) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ) அத்துடன் (இ) வாசகத்தின் கீழுள்ள அல்லது 13 ஆவது பிரிவின் கீழுள்ள அல்லது 14 ஆவது பிரிவின் கீழுள்ள அல்லது 57 (1) ஆம் உட்பிரிவின் (ஆ) வாசகத்தின் கீழுள்ள அல்லது 98 (5) உட்பிரிவின் (அ) வாகத்தின் கீழுள்ள அல்லது ஏதாவது மதிப்பீட்டுக்கு அல்லது அறிவித்தல் ஒன்றுக்கு எதிராக குறித்த கால எல்லைக்குள் மேன்முறையீடு ஒன்றை செய்யப்படாத பட்சத்தில் இப்பிரிவின் (1) ஆவது உட்பிரின் கீழ் வழங்கப்பட்டுள்ள அறிவித்தல் கிடைத்த திகதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் அவ்வாறு விதிக்கப்பட்டிருக்கும் வரி தொடர்பாக ஏதாவது எதிர்ப்பு மனு அவரினால் சமர்ப்பிக்க முடியும் என்பதுடன், ஆணையாளரினால் அந்த எதிர்ப்பு மனுவை கவனத்தில் கொண்டு ஆராய்ந்து, அது தொடர்பாக தமது தீர்மானத்தை அறிவித்தல் வேண்டும். அனுப்பப்பட்டுள்ள அந்த தீர்மானம் ஒரு இறுதித் தீர்மானமாகும். ;

பிரதான நியதிச் சட்டத்தின் 87 (3) உட்பிரிவை திருத்தம் செய்தல்.

8. 2009 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நியதிச் சட்டத்தின் திருத்தப்பட்டவாறான பிரதான நியதிச் சட்டத்தின் 87 (3) ஆம் உட்பிரிவு நீக்கப்பட்டு அதற்குப்பதிலாக கீழ்காட்டப்பட்டுள்ள உட்பிரிவை பிரதியீடு செய்வதன் மூலம் அவ் உட்பிரிவு இவ்வாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளது :-

(3) இப்பிரிவில் எதனைக் குறிப்பிடப்பட்டிருந்தாலும் 11(1) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ), அத்துடன் (இ) வாகத்தின் கீழுள்ள அல்லது 13 ஆவது பிரிவின் கீழுள்ள அல்லது 14 ஆவது பிரிவின் கீழுள்ள அல்லது 57 (1) ஆம் உட்பிரிவின் (ஆ) வாகத்தின் கீழுள்ள அல்லது 98 (5) ஆம் உட்பிரிவின் (அ) வாகத்தின் கீழுள்ள அல்லது ஏதாவது அறிவித்தல் ஒன்றுக்கு எதிராக மேன் முறையீடு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலும் அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட ஏதாவது வரி செலுத்தல் ஆணையாளரின் கட்டளைக்கிணங்க இடை நிறுத்தப்பட்டிருந்தாலும் அந்த மேன் முறையீட்டு மனுவை விசாரணைக்கு எடுக்கப்பட்ட காலவரையறைகளுக்கிடையில் அவ்வறிவித்தல் தொடர்பான கட்டணம்

ஒன்றாக ஏதாவது தொகையை அறவிடப்படல் வேண்டும் என்பதுடன் அல்லது அறவிடப்படுவதற்கு இடமுண்டு என்பதுடன் மேன் முறையீட்டில் இணக்கம் காணப்படும் சந்தர்ப்பத்தில் ஆணையாளரினால் மேன் முறையீட்டுக்கு கடிதம் மூலம் வழங்கப்படும் அறிவித்தல் ஊடாக அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட ஏதாவது திகதியொன்று அல்லது அத்திகதிக்கு முன்னர் உள்ள திகதியில் அத்தொகையை செலுத்த வேண்டுமென அம் மேன்முறையீட்டுக்கு கட்டளையிட முடியும்.

*பிரதான நியதிச் சட்டத்தின் 102 (1) ஆம் அத்துடன் (2) ஆம் உட்பிரிவை திருத்தம் செய்தல்.*

9. பிரதான நியதிச் சட்டத்தின் 102 ஆம் பிரிவின் (1) ஆம் அத்துடன் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாக கீழ் காட்டப்பட்டுள்ள உட்பிரிவை பிரதியீடு செய்வதன் மூலம் அப்பிரிவு இவ்வாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளது :-

*பதவி இரகசியங்கள்.*

(1) இந்நியதிச் சட்டத்தின் கீழ் ஒருவருக்குரிய பணிகளை நிறைவேற்றப்படுவதை தவிர இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக அல்லது நடைமுறைப்படுத்தப்படும் போது எவராவது ஒருவருக்கு உதவுவதற்காக அல்லது சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் அல்லது இருக்கும் சகல ஆட்களும், நியதிச் சட்டத்தின் கீழ் ஒருவருக்குரிய பணியை நிறைவேற்றும் போது எவராவது ஒருவரது கருமங்கள் தொடர்பாக தனக்கு அறிந்து கொள்வதற்கு கிடைக்கும் சகல விடயங்கள் சம்பந்தமாக இரகசியத்தை பாதுகாக்கவும் மற்றும் பாதுகாக்கும் போதும் உதவியளித்தல் வேண்டும். மேலும் அந்த விடயங்களுக்கு உரியதான எவராவது ஆள் ஒருவருக்கு அவருக்கு அல்லது அவரது அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவருக்கு அல்லது அமைச்சருக்கு அல்லது நிதி அமைச்சின் செயலாளருக்கு அல்லது நிதி அமைச்சின் செயலாளரினால் உரிய முறையில் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தைத் தவிர்ந்த எவராவது ஒருவருக்கு அத்தகைய ஏதாவது விடயத்தை அறிவிக்கப்படாமல் இருப்பதுடன் ஆணையாளரின் சொந்தமான, பொறுப்பில் அல்லது நிர்வாகத்தில் உள்ள ஆவணங்கள் எதையும் பெற்றுக்கொள்வதற்கு எவராவது ஒருவருக்கு இடமளித்தல் அல்லது அனுமதி வழங்கல் அல்லது செய்யப்படலாகாது ;

(2) இந்நியதிச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சகல ஆட்களினாலும் இந்நியதிச் சட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் சமாதான நீதிவான் ஒருவரினால் அல்லது சத்தியப்பிரமான ஆணையாளர் ஒருவரின் முன்னிலையின் குறித்த படிவமொன்றில் இரகசியம் பேணல் தொடர்பான சத்தியம் அளிக்கப்பட்டு கையொப்பமிடல் வேண்டும் என்பதுடன் அமைச்சரினால் அல்லது நிதி அமைச்சின் செயலாளரினால் அல்லது நிதி அமைச்சின் செயலாளரினால் உரிய முறைப்படி அதிகாரம் குறித்தொதுக்கப்பட்ட உத்தியோகத்தரினால் அல்லது அந்த நியதிச் சட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் சமாதான நீதிவான் ஒருவரினால் அல்லது சத்தியப்பிரமாண ஆணையாளரின் முன்னிலையில் குறிக்கப்பட்ட படிவத்தில் இரகசியம் பேணல் தொடர்பான சத்தியம் செய்து அதில் கையொப்பமிடல் வேண்டும்.

10. பிரதான நியதிச் சட்டத்தின் 102 (5) ஆம் உப பிரிவுக்குப் பின்னர் வரும் கீழ் காட்டப்பட்டுள்ள புதிய உப பிரிவை சேர்த்துக் கொள்வதினால் அப்பிரிவு இவ்வாறு திருத்தப்பட்டுள்ளது :-

(6) இப்பிரிவில் எவை குறிப்பிடப்பட்டிருந்தாலும், எவராவது ஒருவர், அல்லது நிறுவனத்தினால் கொண்டு செல்லப்படும் ஏதாவது வியாபாரமொன்று மொத்தமாக அல்லது சில்லறை வியாபாரத்திற்கு உட்பட்ட மொத்த விற்பனை தொடர்பாக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு தேவைப்பட்ட ஏதாவது விடயம் தொடர்பாக இறைவரி ஆணையாளரினால் தேவையென கருதப்படும் அளவுக்கு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அத்தகவல்களை வழங்க முடியும்.

*பொருள்கோடல்.*

11. பிரதான நியதிச் சட்டத்தின் 106 ஆவது பிரிவில் "பெறுமதி" எனும் பொருள் கோடலுக்குப் பின்னர் கீழ் காட்டப்பட்டுள்ள புதிய பொருள் கோடல்களை உட்படுத்துவதன் மூலம் அப்பிரிவு இவ்வாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளது:-

இந்நியதிச் சட்டத்தின் நோக்கத்திற்காக -

"மொத்த விற்பனை வரி" என்பது 3 (1) ஆம் பிரிவின் கீழ் கணிப்பீடு செய்யப்பட்ட வரி எனக் கருதப்படுவதுடன் அதற்கு 11 ஆவது பிரிவின் கீழ் விதிக்கப்படும் தடுத்துவைக்கும் மொத்த விற்பனை வரியும் உள்ளடக்கப்படும்.

''உற்பத்தியாளர்'' என்பது ஏதாவது பொருளுக்கான அல்லது இரசாயன செயல்பாட்டில் அல்லது வேறுவொருவரினால் ஏதாவது பொருளொன்றின் இணைவு அல்லது வெளித்தோற்றத்தை முழுமையாக மாற்றும் ஆளொருவர் எனக் கருதப்படும்.

''பொருட்கள்'' என்பது மூலப்பொருட்கள் விவசாயம் அல்லது வீட்டுத்தோட்ட உற்பத்தி என்பன உள்ளடக்கப்படும்.

''நிதி அமைச்சின் செயலாளர்'' என்பது மேல் மாகாண சபையின் நிதி விடயத்திற்கு பொறுப்பாளரான அமைச்சின் செயலாளர் என கருதப்படும்.

102 (1) அத்துடன் (2) உட்பிரிவின் நோக்கத்திறகாக ''உரிய முறையில் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர்'' என்பது நிதி அமைச்சின் செயலாளரினால் எழுத்துமூலம் தத்துவம் அளிக்கப்பட்ட மேல்குறிப்பிட்ட விடயத்தில் தேர்ச்சி பெற்றுள்ள அரசாங்க உத்தியோகத்தர் எனக் கருதப்படும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும் என்பது.

12. இந்நியதிச் சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்கும், ஆங்கில உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

5- 137

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.